உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி-ச0.] சித்திரபானு-ஹு மாசி மீ [பகுதி-ச.

Vol. 40. February-March 1943. No. 4.

குண்டலகேசியின் வரலாறு

[ஸ்ரீ. N. ஐயாஸ்வாமி சாஸ்திரிகள், திருப்பதி]

குண்டலகேசி என்னும் காப்பியம் ஐந்து தமிழ்ப்பெருங்காப்பியங்களுள் ஒன்றாக நம் தமிழ்நாட்டில் விளங்கிவந்ததை வேறு பற்பல நூல்களின் மேற்கோள்களால் அறிகிறோம். இப்பெருங்காப்பியம் இதுகாறும் நம் தமிழ்ப்புலவர்களுக்குக் கிடைத்ததாக நமக்குப் புலப்படவில்லை. இந்நூலைக் கண்டிப்பதை முக்கியநோக்கமாகக் கொண்டது நீலகேசி என்னும் சைனசமயநூல். இது, ஐந்து சிறிய தமிழ்க்காப்பியங்களுள் ஒன்றாகும். இந்நூலிற் குண்டலகேசியைக் கண்டிப்பதற்காக அதிலிருந்து பல கோட்பாடுகளும் அதைப்பற்றி மற்றும் சில குறிப்புக்களும் தரப்பட்டுள்ளன. அவற்றால் குண்டலகேசி என்னும் நூல், மணிமேகலைநூல்போலப் பௌத்தசமயம் பற்றி ஏற்பட்டது என்று அறிகிறோம். அதன் கதாநாயகி குண்டலகேசி என்னும் ஒரு துறவிப்பெண்மணி. இத்துறவிப்பெண்மணியின் வரலாற்றை நீலகேசியுரையாசிரியர் பின்வருமாறு கூறியுள்ளார்:—

"குண்டலகேசியென்பாள் ஒரு வைசியகன்னிகை. இவள் ஒருநாள் பிராஸாதஸ்தலத்து விளையாடுகின்றாளாக, ஒரு வைசியபுத்ரன் காளனென்பான், பௌத்ததர்சனங்கொண்டு, பல்வழியுஞ் சோரவிருத்திபண்ணிச்செல்வானை, அரசன் வதிக்கவென்றேவச் சிறைப்பட்டுப்போகின்றானை, முன்சொன்ன குண்டலகேசி கண்டு

காமபரவசையாக, அதனையறிந்து, அவளுடைய பிதா ராசாவைக் கண்டு யாதானுமோருபாயத்தால் மீட்டு இவனுக்குக் குண்டலகேசி யென்னும் கன்னியினை விவாகவிதியாற் கொடுத் தினிதுசெல் கின்ற காலத் தொருநாள் பிரணயகலகத்து நர்மோக்திமுகத்தால் நீ கள்வனன்றோவென்று குண்டலகேசி சொல்லக் காளனும் தன் னுள்ளத்தே சினங்கொண்டு பின்பொருநாள், வித்யாலாதவ்யாஜத் தா லிவளைத் தனிக்கொண்டு ஒரு பர்வதத்தேறி, 'நீ என்னை யிவ் வாறுசொல்லுதலில் யா னுன்னைக் கொல்லத்துணிந்தே'னெனக் குண்டலகேசியும், "'தற்கொல்லியை முற்கொல்லி' யென்பதன்றோ! இவனை யான் கொல்வே"னென நினைந்து, 'யான் சாகின்றேனாகி னும் மை வலங்கொண்டு சாவ'லென அதற்கியைந்த காளனை வலங் கொள்கின்றாள், வரையினின்றும் விழ நூக்கினள். நூக்கக் காள னும் புத்தஸ்மரணத்தினால் மோக்ஷித்தனன். குண்டலகேசியும் பர்த்ருவிரஹ துக்கிதையாகித் துறப்பனைநினைந்து பரசமயங்க ளெல்லாம் நாவல்காட்டி ஜயித்துப் பௌத்ததர்சனங்கொண்டு முக்தி பெற்றனள்"......(நீலகேசி, ஸ்ரீ சக்கரவர்த்திநயினார்பதிப்பு, பக் கம். 104-5).

இக்கதைக்கு இருதியாக மூலப்பிரமாணம் பௌத்தநூல்களே யாம். அப்புத்தநூல்களுள் இரண்டு அல்லது மூன்று நூல்கள் எமக்குத் தெரிந்தவை. புத்தகோஷரென்னும் ஓர் பேராசிரியர் தம் தம்மபதவுரையில் இவ்வரலாற்றை விரிவாகக்கூறியுள்ளார். அவர் கூறிய கதைவிரிவைப் பின்பு வரைவோம். தர்மபாலரென்னும் மற் றோருரையாசிரியர் தம் தேரீகாதாவுரையில் அக்கதையைச் சற்றுச் சுருக்கிக்கூறியுள்ளார். இக்கதைமுறை பலஇடங்களில் புத்தகோஷ ருடன் ஒத்திருப்பினும், வேறுபல முக்கிய இடங்களில் வேறுபாடு கள் காண்பதால் தர்மபாலர் புத்தகோஷரையே ஆதாரமாகக் கொண்டாரென்று சொல்வதற்கு இடமிலது. மேலும், தர்மபாலர் அவ்வரலாற்றைக் கூறி இறுதியில் தேரீஅபதானமென ஒருநூலி லிருந்து பல செய்யுட்களை எடுத்துரைத்துள்ளார். தர்மபாலர் கூறியபடி குண்டலகேசி காதல்கொண்ட கள்வன் இராஜகிருகத்தில் ஒரு புரோகிதன்புதல்வன். அவனுக்கு ஸத்துகனென்று பெயர். புத்தகோஷர்வரலாற்றில் அவன் ஒரு செட்டியின்புதல்வன்.

அவன்பெயர் குறிப்பிடவில்லை. நீலகேசியுரையிற் காளனென அவன்பெயர் கூறப்படுகிறது. தேரீஅபதானத்திற் குண்டலகேசி பிறந்த ஊர் கிரிவிரஜமென்று கூறியுளது. கள்வன் குண்டலகேசியின்பாற் சினங்கொண்டதற்குக்காரணம் நீலகேசியிற் சொல்லியதுபோல் வேறு ஒருநூலிலும் கூறப்படவில்லை. பௌத்தநூல்கள் கள்வன் அவளது ஆபரணங்களிற் பேராசைகொண்டு அவளைக் கொல்லத்துணிந்தான் என்று மாத்திரமே கூறுகின்றன. குண்டலகேசி அக்கள்வனை மலைச்சரிவில் தள்ளிக் கொன்றுவிட்டுத் தன் தாய்தந்தையரிடம் செல்லாது, அக்காட்டிலேயே துறவிகளின் பன்னசாலை சென்று துறவுபெற்று நாவல்நாட்டி எல்லாச்சமயிகளையும்வென்று முடிவில் புத்தசமயம் புகுந்தாள் என்று புத்தகோஷர் கூறுகிறார். தர்மபாலரோ முதலில் நிகண்ட (திகம்பரஜைன) சமயத்துச் சன்னியாசம்பெற்றுப் பின்பு பௌத்தசமயம் புகுந்தாள் என்றுரைத்துள்ளார். தேரீஅபதானத்தில் அவள் முதலில் ச்வேதாம்பரஜைனசமயப்படி துறவுபெற்றாளென்று சொல்லப்பட்டுளது. இதனால் தர்மபாலர் தம் வரலாற்றிற்கு எல்லாப்பகுதிகளிலும் தேரீஅபதானத்தை ஆதாரமாகக்கொண்டாரல்லர் என்று நன்கு விளங்கும்.

இவ்வேறுபாடுகள் எவ்விதமேற்பட்டன என்று ஆராயுங்கால் காரணம் நன்குவிளங்கிற்றிலது. ஆனால் அவை குண்டலகேசியின் கதை பற்பலதேயங்களிற் பற்பலமுறைகளில் வழங்கிவந்தமைபற்றி ஏற்பட்டனவென்று ஊகிக்கிறோம். தர்மபாலர் தென்னாட்டு ஆசிரியர்; அங்கு நிகண்டவாதம் ஓங்கிவளர்ந்துவந்தமையால் அச்சமயத்தினைச் சற்றுத் தாழ்வுபடுத்தத் தென்னாட்டிலுள்ளார் அவ்விதம் கூறத்துணிந்தனரென்று ஊகிக்கலாம். தேரீஅபதானநூல் ச்வேதாம்பரசமயம் நன்கு வளர்ந்ததேயத்தில் எழுதப்பெற்றதென்றும் ஊகிக்கலாம். யாதொருவகை ஜைனசமயமும் இல்லாத சிங்களதேயத்து நூல்வழக்கையொட்டிப் புத்தகோஷர் கதையை வரைந்திருப்பதால் அவர் கூறிய கதைமுறையில் அச்சமயத்தின்பெயர் கூறப்படவில்லை. குண்டலகேசிநூலில் இக்கதை எவ்விதம் கூறப்பட்டுளதென்று திண்ணமாகச்சொல்லமுடியாது. ஆனால் நீலகேசியில் வரையப்பெற்றகதைமுறை பெரும்பாலும் குண்டலகேசியைப்

பின்பற்றியே இருக்கக்கூடும். ஏனெனில் நீலகேசி, குண்டலகேசியிற் சொல்லிய ஜைனசமயக்குறைகளை நீக்கவும் பௌத்தசமயத்தைக் கண்டித்துத் தம்சமயத்தை மேலாகக்கூறவும் எழுதப்பெற்றதாகலின். ஆகவே அவ்வாலாறு குண்டலகேசியையே ஆதாரமாகக் கொண்டு கூறப்பட்டுளதென்று நம்பலாம். அப்படியாகில் புத்தகோஷரது கதைமுறையையே குண்டலகேசி பொதுவிற் பின்பற்றியதென நினைக்கலாம். குண்டலகேசிநூல் ஜைனசமயத்தின்பாற் பற்பல குறைகளை எடுத்துக் காண்பித்ததுபோல் வைதிகம் முதலான பிறசமயத்தின்பாலும் குறைகள் கூறியுளதென நீலகேசி நூலிலிருந்து நமக்கு நன்கு விளங்கும். மேலும் குண்டலகேசி ஆலவணமென்ற பட்டணத்தில் நாதகுப்தனென்னும் ஆசிரியருடன் வாதம்புரிந்து அவனை வென்றாளென்றும் நீலகேசியிலும் அதனுரையிலும் கூறியிருப்பதைக் காண்கிறோம் (104-வது பக்கம் பார்க்க). ஆகவே குண்டலகேசியார், புத்தகோஷர்கூறுமாறு வேறு சமயத்துத் துறவுபெற்று ஆயிரம் சமயங்களிற் பயிற்சிபெற்று அச்சமயக்கணக்கர்களைவென்று புத்தசமயம் புகுந்தாளென்ற கதைமுறையையே பின்பற்றியிருக்கக்கூடுமென நம்புகிறோம். ஆதலால் புத்தகோஷர் குண்டலகேசியின்கதையை விரிவாகக்கூறியிருப்பதை அவரது தம்மபதவுரை'யென்னும் பாளிநூலிலிருந்து தமிழில் இங்கு வரைவோம்.

இராஜகிருகத்தில் ஓர் அழகிய பதினாறுவயதுமுதிர்ந்த செட்டிப்பெண் இருந்தாள். அவள் தந்தைதாயர் ஏழுமாடங்களுடன் கூடின ஓர் அரண்மனையின் மேல்அறையில் அவளை வசிக்கும்படி செய்தனர். அவளுக்குவேண்டிய பணிப்பெண்களையும் நியமித்தனர். பிறகு ஒருநாள் இராசபடர்கள் நற்குலத்திற்பிறந்த ஓர் ஆண்மகன் களவுத்தொழில்செய்ததுபற்றி அவன்கைகளைப் பின்புறங்கட்டி ஒவ்வொரு நாற்சந்தியிலும் சாட்டைகளால் அடித்து இழுத்து அழைத்துச்சென்றனர். அச்செட்டியின்புதல்வி பெருங்கூட்டத்திடை அவனைக்கண்டு தம்மாளிகையில் இருந்தவண்ணம் அவன்பாற் காதல்கொண்டு அவனையே நினைந்து நினைந்து உணவுகொள்வதையும்விட்டு மஞ்சத்திலேயே சோர்ந்து கிடந்தனள். பிறகு அவள்தாய் 'இது ஏன்' என்று கேட்டு

'கள்வனென அழைத்துச்செல்லப்படும் அவனையே நான் மணஞ்செய்துகொள்வேன்; அப்படியாகில் பிழைத்திருப்பேன் ; இல்லாவிடில் இலேன்; இந்தவிடத்தே உயிர்துறப்பேன்' எனப் பதில் மொழிந்தாள். 'புதல்வியே! இவ்விதம் செய்தலாகாது, குலத்திலும் சாதியிலும் செல்வத்திலும் நமக்குத் தகுதியான வேறொருவனைக் கணவனாகப் பெறுவா'யென்று தாய் பன்முறை சொல்லியும், 'வேறு கணவனை நான் வேண்டவில்லை. அவனை அடையாவிடில் உயிர்துறப்பேன்' என்றாள் புதல்வி. தாய் அவளை மதியுரைகூறித் திருத்தஇயலாதவளாகித் தந்தையிடம் அறிவித்தாள். தந்தை நல்வார்த்தைகளைச் சொல்லித் திருத்தமுயன்றும் பயனில்லாதொழிய, 'யாது செய்குவது' என்று நினைத்துக் கள்வனை அழைத்துச்செல்லும் அரசன்வேலைக்காரனுக்கு ஆயிரம்நாணயங்களையனுப்பி, 'இதைப் பெற்றுக்கொண்டு அந்தக் கள்வனை என்னிடம் விடு' என்று வேண்டினன். அவன் அப் பணத்தைப் பெற்றுக்கொண்டு கள்வனை விட்டுவிட்டு, மற்றொருவனைக் கொன்று, அரசனிடம் 'கள்வன் கொல்லப்பட்டா'னென அறிவித்தான்.

செட்டியும் அவனுக்குத் தன்புதல்வியை மணம்செய்துவைத்தான். அன்றுமுதல் அவள், 'கணவனை மகிழ்ச்சிபெறச்செய்வே'னென எண்ணிப் பற்பல ஆபரணங்களையும் அணிந்துகொண்டு தானே உணவுகளைத் தயாரித்து அவனுக்கு அளித்துவந்தாள். சிலநாட்கள் சென்றதும், கள்வன் 'எப்பொழுது இவளைக்கொன்று இவளது ஆபரணங்களைக் கைப்பற்றி ஓர் கள்ளுக்கடையிற் கொடுத்துக் குடிப்பேன்' என்று நினைத்தான். அதற்கு இதுதான் வழியென்று சிந்தித்து உணவு உட்கொள்ளாமல் மஞ்சத்தின் மேலே படுத்துக்கிடந்தான். கிடக்க, அவன் கணவனருகிற்சென்று 'உமக்கு என்ன அசௌக்கியம் நேர்ந்தது?' என்று வினவ, அவன்: 'யாதுமில்லை' யென, மனைவி: 'ஏன் இவ்வாறு படுத்துக்கிடக்கிறீர்?' என, அவன், 'மனைவி! அன்று அரசன்சேவகர்கள் கைகளைப் பின்புறங்கட்டிச் சிறைப்படுத்தி என்னை அழைத்துச்செல்லுங்காற் கள்வமலைச்சரிவில் வீற்றிருக்கும் தேவதைக்குப் பலிகொடுப்பேனென வேண்டிக்கொண்டு உயிர்பெற்றேன். உன்னையும் அத்தெய்வத்தின் அருளாற் பெற்றேன். ஆதலால் அவ்வேண்டுதல் நிறைவு

பெறவேண்டுமெனக் கவலையுற்றேன்' என, அவள் 'உமக்கு அக் கவலைவேண்டாம். நானே பலிச்சடங்கைச் செய்துமுடிப்பேன்-எவ்வாறுசெய்தல்வேண்டுமென்று சொல்வீர்' என, அவன், 'சிறிதளவு அப்பம், தேன்கலந்த பாயஸம், நான்குவகைமலர்கள், பொரி இவைகளாற் செய்தல்வேண்டும்' என, அச்சொல்லைக்கேட்டு அவள் அப்பம் முதலியவற்றைத் தயாரிக்கக் கட்டளையிட்டாள். எல்லாவற்றையும் தயாரித்துக் கணவனிடம் அறிவித்துப் பலிச்சடங்கை நிறைவேற்றுவதற்கு அவனை அழைத்தாள். அவன், 'மனைவி! அப்படியாகில் உறவினர்களை நிறுத்திவிட்டு, விலைபெற்ற எல்லா ஆபரணங்களையும் அணிந்துகொண்டுவருவாய். சிரித்து விளையாடி உல்லாசமாய்ச் செல்வோம்' என்றான். அவளும் அவ்வாறுசெய்தாள். மலையடிவாரம் சென்றதும், 'மனைவி! இதற்கப்பால் நாமிருவரும் தனியே செல்வோம். மற்றவர்களை வண்டியுடன் அனுப்பிவிடு, வேண்டுதலையைச் செய்துமுடிப்போம்' என்றான் கணவன். அவளும் அவ்விதமேசெய்தாள்.

கள்வன் அவளை அழைத்துக்கொண்டு *கள்வமலைச்சரிவிலேறினான். அம்மலையின் உச்சிசென்றதும் 'கணவனே! தெய்வக்கடனைச் செய்துமுடியும்' என்றுசொன்னாள் மனைவி. கள்வன் ஒன்றும் பேசாமல் நின்றான். 'ஏன் பேசாமல்நிற்கிறீர்?' என்று அவள் வினவத் 'தெய்வக்கடனை நிறைவேற்றுதலால் எனக்கு ஆகவேண்டியது யாதுமில்லை. உன்னை வஞ்சித்து இங்கு அழைத்துவந்தேன்' என்று பதிலளித்தான் கள்வன். 'எதற்காக?' என்று அவள் மீட்டும் வினவ, 'உன்னைக் கொன்று உன்னாபரணங்களைக் கவர்ந்துசெல்வதற்கு' என்றான். அதற்கு அவள் மரணபயத்தால் நடுங்கிக் 'கணவனே! யானும் என்னாபரணங்களும் உம்முடைய உடைமைகளே; ஏன் இப்படிச் செப்புகின்றீர்? இவ்வாறு செய்யாதீர்' என்று மேலும்மேலும் வேண்ட,

அவன் அவள் வேண்டுகோளுக்கு இணங்காமல் 'கொலையேசெய்கு வேன்' என்று கூறினான். இப்படியிருக்க, 'என்னைக் கொல்வதால் யாது பயன்? எனது ஆபரணங்களைக் கவர்ந்துகொண்டு எனக்கு உயிரளிப்பீராக. இன்றுமுதல் யான் உமக்குத் தாயாகவோ அல்லது அடிமைப்பெண்ணாகவோ இருந்து பணிசெய்குவேன்' என்று சொல்லி, மேலும், 'இந்த எல்லாத் தங்கத்தோள்வளைகளையும் வைடூரிய ஆபரணங்களையும் மற்றுமெல்லாவற்றையும் கவர்மின்! யான் உமக்கு அடிமையாகுவேன்' என்று கூறினாள். இதைக் கேட்ட கள்வன், 'இவ்வாறுசொல்லி நின் தாய்தந்தையரிடம் அறி விப்பாய், ஆதலால் கொன்றேதீருவேன்; பித்தர் புலம்புவதுபோற் புலம்பாமல் இருப்பாயாக' என்றுரைத்து, மேலும், 'பெரும் புலம்பலைவிடு, எல்லா ஆபரணங்களையும் கட்டிவை. நினதுயிர் மட்டுமன்றி எல்லாவற்றையும் கவர்வேன்' என்று கூறினான். கூறலும், அவள், 'ஆ! இது என்ன சூழ்ச்சி! அறிவு அட்டு இட்டு உணற்குமட்டும் அமைந்ததன்று; பகுத்தறிந்து சமயத்திற் குத்தக்கவாறு நடந்துகொள்வதற்கு ஏற்பட்டுளது' என்று நினைந்து, 'இதற்குச் செய்யவேண்டியது இது'வென்று உறுதிகொண்டு, கள் வனைநோக்கிக் 'கணவனே! உம்மைக் கள்வனென்று பிடித்துச் சிறைப்படுத்தி அழைத்துச்செல்லுங்கால் நான் என் தாய் தந்தைய ரிடம் தெரிவித்து உமக்கென ஆயிரகாணயங்களைக் கொடுத்து உம்மை மீட்டு அன்றுமுதல் உமக்குத் தொண்டுசெய்து வந்துளேன். இன்று உம்மை நன்கு பார்த்து வணங்க அனுமதி யளிப்பீர்' என்று வேண்டினாள். கள்வன் 'பத்ரே! அவ்வாறேசெய்' என்று அவ்வேண்டுகோளுக்கிணங்கி, மலையின் முனையில் நின்றான். பிறகு அவள் அவனை மூன்றுமுறை வலம்வந்து நான்கு பக்கங்களி லும் வணங்கிக் 'கணவனே! உம்மைப்பார்த்தல் இதுவே கடைசி முறை. இனி என் பார்வை உமக்கோ உம் பார்வை எனக்கோ இல்லாமற்போய்விடும்' என்று சொல்லி, முன்னும் பின்னும் தழு வித் தன்னைமறந்து மலையின்முனையில் நிற்கும் அவனுடைய பின் பக்கத்தில் நின்று ஒருகையினால் அவன் கழுத்தைப்பிடித்து மற் றொருகையினால் பின்கச்சத்தைப்பிடித்து மலையின்சரிவில் அவ னைத் தள்ளிவிட்டனள். அவன் மலையின் உச்சியினின்று உருண்டு

தரையில் விழுந்து மரித்தான். அப்பொழுது அக்கள்வமலைச்சாரிவில் வீற்றிருக்கும் தேவதை இவ்விருவருடைய செயலையும் கண்டு, அப்பெண்ணைப் பாராட்டி, 'நன்று நன்று' என்று உற்சாகமூட்டி, "எப்பொழுதும் புருஷர்களே அறிவுடையவர்கள் என்பதில்லை, அவ்வப்போது பெண்மணிகளும் அறிவுடையவர்களே" என்று கூறியது. பின் அவள், "நான் வீடுசென்றால் 'கணவன் எங்கே?' என்று கேட்பார்கள்; 'கொன்று வீழ்த்தினே'னெனச்செப்பின், 'ஆயிர காணயங்கொடுத்து மீட்டுவந்தவனைக் கொன்றுவிட்டாயே' என்று கொடியமொழிகளால் தூற்றுவார்கள்; 'எனதாபரணங்களின்பால் பேராசைகொண்டு என்னைக் கொல்லமுயன்றான்' என்று செப்பினும் நம்பமாட்டார்கள்; 'வீடுசென்று செய்வது யாது?'" என்று நினைத்து ஆபரணங்களை அவ்விடத்தே எறிந்துவிட்டு, மலையினின்றிறங்கிக் காட்டிற்குள் சுற்றித்திரிந்து, அங்கே துறவிகளது பன்னசாலையொன்றைக் கண்டு, அதனுட்புகுந்து வணங்கிப் 'பெரியோரே! உங்கள் துறவறத்தை எனக்கும் அருள்வீராக' என்று வேண்டினள். அப்படியே அவர் அவளுக்குத் துறவறத்தை அருளினர். அவளும் துறவறம்பெற்று, 'உங்கள் துறவறத்து மேன்மை யாது?' என்று வினவினள். 'பத்ரே! [1]பத்துவகைக் கஸிணங்களிற் பயிற்சிபெற்றுத் தியானஞ்செய்தல் (அதாவது மனத்தை ஓரிடத்தில் நிலைநிறுத்தல்) அல்லது ஆயிரம் சமயங் (வாதஸஹஸ்ஸங்) களிற் பயின்று வாதம் புரிதல்; இதுவே எங்களது துறவறத்து மேன்மை' என்றுரைத்தனர் முனிவர். 'தியானத்தில் தேர்ச்சிபெற என்னால் ஆகாது, ஆதலால் ஆயிரம் சமயங்களிற் பயிற்சிபெறுவேன்' என்று அவள் செப்ப, அம்முனிவர்கள் ஆயிரசமயங்களில் அவளைக் கற்பிக்கவைத்து,

---

[1] பாளி: தஸகஸிண. கஸிணமென்பது மனதை நிலைநிறுத்துவதற்கும் தியானத்திற் பயிற்சிபெறுவதற்கும் வழியாகவிருக்கும் ஒரு கருவியை. அது பத்துவகையாம்: நிலம், நீர், நெருப்பு, காற்று, நீலம், சிவப்பு, மஞ்சள், வெளுப்பு, வெளிச்சம், பரிச்சின்னாகாசம், என. நிலகஸிணம் என்பது தரையில் மண்டலமாக ஒரு திட்டாணிசெய்து அதன் அருகில் வீற்றிருந்து இரண்டுகண்களையும் அதன்பாற் செலுத்தி மனதையும் நிலமென்ற பதத்தில் நிலைநாட்டித் தியானம்புரிவது. இவ்வாறே மற்றக் கஸிணங்களின் பொருள் தக்கவாறு அறிந்துகொள்க.

நன்கு பயிற்சியடைவித்து, 'இனி இச்சம்புத்தீவில் உன்னுடன் சொற்போர்புரிய வல்லவர்களைத்தேடிப்பார்' என்று, அவள் கையில் நாகக்கிளையொன்றைக் கொடுத்துப் 'புறப்படு, உன்னுடன் தருக்கஞ் செய்யவல்லவன் இருப்பின் அவனுக்கு நீ அடிமையாயிருப்பாய், அவன் துறவியானால் அவனிடத்துத் துறவறம் பெறுவாய்' என்று சொல்லி அவளை விடுத்தனர்.

அவள் சம்புத்தீவுத்துறவி என்னும்பெயருடன் அவ்விடமிருந்து புறப்பட்டுச் சென்றவிடமெல்லாம் வாதப்போரில் வென்று திரிந்தனள். அவளுடன் தருக்கஞ்செய்வதற்கு வல்லவர் ஒருவருமில்லை. 'இதோ இங்குச் சம்புத்தீவுத்துறவி வருகிறாள்' எனக் கேள்வியுற்ற எல்லாப்புலவரும் ஓடினர். அவள் கிராமத்திலோ பட்டணத்திலோ பிச்சைக்குச்செல்லும்பொழுது அக்கிராமத்திற் புகும்வழியில் மணலைக் குவித்து அதில் அந் நாகக்கிளையை நாட்டி, 'என்னுடன் தருக்கஞ்செய்யவல்லவன் இக்கிளையைப் பிடுங்கி வீழ்த்துவான்' எனச் சொல்லிக் கிராமத்தினுட் புகுவாள். அவ்விடத்தை நாடுவதற்குக்கூட வல்லவர் ஒருவருமில்லை. அவளும், ஒருகிளை வாடினதும் மற்றொருகிளையை எடுத்துச்செல்லுவாள். இவ்வாறு சுற்றித்திரிந்து, சிராவஸ்தி என்னும் பட்டணம்வந்து சேர்ந்தனள். அதன் வாயிலில் வழக்கப்படி கிளையை நாட்டிப் பிச்சைக்குக் கிராமத்தினுட் புகுந்தனள். பல சிறுவர்கள் அக்கிளையைச் சூழ்ந்துநின்றனர். அச்சமயம் பிச்சை வாங்கி உணவுண்டு பட்டணத்திலிருந்து திரும்பிவரும் சாரீபுத்திர ரென்னும் ஒரு துறவர் கிளையைச்சூழ்ந்துநிற்கும் அப் பிள்ளைகளைப்பார்த்து, 'இது யாது' என்று வினவப் பிள்ளைகள் அவ்விருத்தாந்தத்தைத் தெரிவிக்க, அப்படியாகில் 'பிள்ளைகளே! இக்கிளையைப் பறித்து வீழ்த்துங்கள்' என்று தூண்டினர். 'கிழவரே! நாங்கள் அஞ்சுகின்றோம்' என்று பிள்ளைகள் மறுக்க, 'நான் தருக்கம்புரிவேன், நீங்கள் அஞ்சாமல் வீழ்த்தித்தள்ளுங்கள்' என்ற கிழவர் மொழியைக்கேட்ட சிறுவர், உற்சாகத்துடன் கிளையை வீழ்த்தி மகிழ்ச்சியுடன் அதன்மேற் புழுதியையும் நிரப்பினர்.

துறவி திரும்பிவந்து அவர்களை நிந்தித்து 'உங்களுடன் நான் தருக்கஞ்செய்தல் முறையல்ல. அப்படியிருக்க என் இக்கிளையை

வீழ்த்தினீர்கள்?' என்று வினவினாள். 'சிறுவர் அப்பெரியோர் எங்களை வீழ்த்தத்தூண்டினர்' என்றனர். அவள் 'பெரியோரே! நீரா அக்கிளையை வீழ்த்தத் தூண்டினீர்?' என்று கேட்க, 'ஆம்' என்றார் பெரியோர். அப்படியாகில், 'என்னுடன் வாதம்புரிவீர்' என்றாள் துறவி. 'நல்லது அப்படியே செய்குவேன்' என்று இசைந்தனர் பெரியோர். அவள் மாலை மரநிழலில் வீற்றிருந்து கேள்வி கேட்பதற்கு அப்பெரியோரின் அருகில் வந்தனள். பட்டணத்தில் இருக்கும் எல்லாமக்களும், அவ்விருவர்வாதத்தையும் கேட்போமென்றுவந்து பெரியோரை வணங்கி ஒருபுறம் வீற்றிருந்தனர். துறவி, 'கேள்விகேட்கலாமா?' என்றாள். பெரியோர் 'கேட்கலா' மென்றார். பிறகு, ஆயிரவாதங்களையும் (வாடிஸஹஸ்ஸம்) கேட்டனள். கேட்கப்பட்டகேள்விகள் எல்லாவற்றிற்கும் பெரியோர் பதிலளித்தனர். பிறகு, 'இவ்வளவுதானு உன் கேள்வி?' என்று பெரியோர் வினவ, 'இவ்வளவே' என்றுரைத்தனள் துறவி. 'நீ பல கேள்விகளைக் கேட்டாய், நான் ஒருகேள்வியே கேட்பேன், பதில் அளிப்பாயாக' என்று பெரியோர் சொல்லக்கேளுமென்றாள் துறவி. "ஒன்றென்பது யாது" என்று கேட்டனர் பெரியோர். அவள் இவ்வாறு பதிலளித்தல்வேண்டுமென அறியாமல், 'அது யாது?' என்று மீட்டும் பெரியோரைக் கேட்டனள். சகோதரி! "இது புத்தனதுகேள்வி[1] (புத்யபஞ்ஞம்)" என்றார் பெரியோர். "பெரியோரே!

---

[1] தர்மபாலாசிரியர்கதைமுறையிற் பெரியோர் பதிலளிக்கையில் "ஒன்றென்பது புத்தனது கேள்வி" எனக் கூறாமல், 'நீ இதைக்கூட அறியாதவள், வேறு எதையறிவாய்?' எனச் சொல்லி அறமுபதேசித்தனர் என்று வரைந்துளார். இங்குக் கூறிய அறமென்பதைத் தேரீஅபதானம் நன்கு விளக்கிக் கூறுகிறது.

"ஸ்கந்தா ச ஆயதநா தாதுயோ ।
அஸாஸ்வதா இதிவாத அநத்தாநிய நாயகோ"

"ஸ்கந்தம், ஆயதனம், தாதுக்கள் இவைகளன்றி வேறு யாது மிலது. அவைகளும், அசுபம், அநித்தம் துக்கம் அநாத்மம் எனக் கருதப்படும்" எனச் செப்பினர் பெரியோர்.

அதை எனக்குக் கொடுத்தருள்வீர்" என்று துறவி வேண்ட, என்னைப்போல் ஆவாயாகிற் கொடுத்தருள்வேன் என்றார் பெரியோர். 'அப்படியாகில் உங்கள் துறவறத்தை எனக்கருள்வீர்' என்று அவள் வேண்டினள். பெரியோர் பெண்துறவிகளிடம் அறிவித்து அவளுக்குத் துறவறத்தையருளினர். அவளும் துறவறம்பெற்று **உபஸம்பதா**[1]வெனும் நிலையுற்றுக் குண்டலகேசி[2]யெனப் பெயரிடப்பட்டுச் சிலநாட்களில் உலகமுறையின்மிக்க தெய்வ[3]குணங்களுடன் அருகதநிலையடைந்தனள்.

---

[1] இந்நிலை பௌத்தசங்கத்து நியமப்படி இரண்டாவதாகும். இந்நிலையில் ஒருவன் ஒரு பௌத்தஸந்நியாசிக்குத் தக்க எல்லா அதிகாரங்களையும் பெறுகிறான். இந்நிலை 20 வயதிற்குப்பிறகே ஒருவன் பெறலாம். இதற்கு முன்நிலை "ஸாமணேர"மெனச் சொல்லப்படும். இந்நிலை 8 வயதுமுதல் ஒருவன் பெறலாம். ஆகவே இம் முதல்நிலை நமது ப்ரம்மசர்ய ஆசிரமத்திற்குச் சமமாகும்.

[2] இதனால் இப்பெயர் இவளுக்கு ஸந்நியாஸாசிரமத்தில் இடப்பட்டதென விளங்கும். தர்மபாலர்கதைமுறையில் "குண்டலகேசா" எனக் காணப்படுகிறது. அங்கு இவள் இப்பெயர்பெற்றதற்குக் காரணம் பின் வருமாறு சொல்லியுளது. இவள் நிகண்டவாதிகளிடம்சென்று, 'உங்களுடைய துறவறத்தில் மிகவும் மேன்மையானதை எனக்குக் கொடுத்தருள்வீர்' என்று வேண்டினள். அவர்கள் அப்படியே சரியென்று ஒப்புக்கொண்டு, பனைமட்டைக்கத்தியினால் தலையை மொட்டையடித்துத் துறவை யளித்தனர். பின்பு அவள் தலைமயிர் சுருள்சுருளாக நன்கு வளர்ந்தமையால் அவள் "குண்டலகேசா" என்றழைக்கப்பெற்றாள்.

[3] பாளி: படிஸம்ஹிதா. இதன் பொருள் "பகுத்தறிவு" "நன்கு உணர்தல்" என்பது. இது நான்குவகையாம்: அத்தபடி ஸம்ஹிதா, தம்மபடி, நிருத்திபடி, படி஭ாநபடி என. இந்நான்கும் ஓர் அருகனுக்கு இன்றியமையாத குணங்களாம். தேரீ அபதானத்திலும் இக்குணங்களை நன்கு விளக்கிக்கூறியிருப்பதைக் காணலாம்.

மதிப்புரை

பழநியாண்டவர்:— இது, பழநி ஸ்ரீ தண்டாயுதபாணிசுவாமி தேவஸ்தானத் திங்கள்வெளியீடாக நிகழும் சித்திரபானுவருடம் தைப் பூசநாள்தொடங்கி வருவது. ஸ்ரீ தண்டாயுதபாணிசுவாமி தேவஸ்தான நிருவாக அதிகாரி திரு. ஜே. எம். சோமசுந்தரம்பிள்ளை B.A., B.L. அவர்கள் இதன் ஆசிரியராவர்; சிவத்திரு ஈசானசிவாசாரியரவர்கள் இதன் உதவியாசிரியராவர். இதனுள் ஆசிரியர்களாலும் பிற புலவர்களாலும் பழநித் தல தீர்த்த மூர்த்தி வரலாறுகளும் அத்தலத்துப் பெரியோர் வரலாறுகளும் அங்கு நிகழும் பூசை சிறப்பு திருப்பணி முதலியவற்றின் விவரங்களும் சைவசமயவுண்மைகளும் பிறவும் சுருக்கி விளக்கி வரையப்பட்டுள்ளன. இதன் ஒவ்வோரிதழிலும் முதலில் இத்தலவிஷயமாக அருணகிரிநாதர் இயற்றிய திருப்புகழ்ப்பாடலும் உரையும், இறுதியில் இத்தலசம்பந்தமாகப் பிற்காலப்புலவர்கள் இயற்றிய இனிய வண்ணப் பாடல்களும் சேர்க்கப்பெற்றிருப்பது, படிப்போர்க்குக் கவிச்சுவையும் ஊட்டுவதாக இருக்கிறது. இத்தகைய வெளியீடுகள் பண்டையோர் ஆலய அமைப்பு வழிபாட்டுமுறை முதலியவற்றால் நன்கு பேணிவந்த மக்கள் கலைத்துறைத்தேர்ச்சியும் நல்லொழுக்கமும் சமயவுணர்ச்சியும் மேலும் சிறக்க வுதவுவனவாகும். இதன் ஆண்டு வரி அஞ்சற்கூலியுடன் ரூபா 1—12—0, [தனிப்படி அணா 2. தபாற்கூலி வேறு]. வேண்டுவோர் பழநி ஸ்ரீ தண்டாயுதபாணி சுவாமி தேவஸ்தான காரியாலயத்திற் பெறலாம்.

திருக்கருகாவூர் முல்லைவனநாதர் நான்மணிமாலையும் கரும்பனையநாயகி இரட்டைமணிமாலையும்:—இவை தஞ்சைமாநகர்த் திரு. வீரபத்திரசுவாமி என்பவரால் இயற்றப்பட்டவை. பள்ளியூர் முருகன் தமிழ்க்கழகத்தாரால் ஒரே புத்தகமாக அச்சிடப்பெற்றவை. இவற்றுட் காணப்படும் பாக்களும் இனங்களும் செம்பாகமாயமைந்துள்ளன. இப்புத்தகத்தின்விலை அணா இரண்டு. வேண்டுவோர் தஞ்சாவூர்ஜில்லா சாலியமங்கலம்போஸ்டு பள்ளியூர் முருகன் தமிழ்க்கழக அமைச்சர் திரு. ப. கி. நாராயணசாமி அவர்களிடம் பெறலாம்.

ஸ்ரீ:

அருளிச்செயற் பாடவமைதி

௫௬-ஆம் பக்கத் தொடர்ச்சி.

[ராவ்ஸாஹிப். வித்வான். ஸ்ரீ. மு. இராகவையங்காரவர்கள்.]

18. பெரியதிருமொழி 2–9–1–ஆம் பாசுரத்தில்—

"பல்லவன் வில்லவ னென் றுலகிற் பலராய்ப் பலவேந்தர் வணங்குகழற்
பல்லவன் மல்லையர் கோன்பணிந்த பரமேச்சுர விண்ணகரமதுவே"

என்ற அடிகளில், 'பல்லவன் வில்லவன்' என்பது 'வல்லவன் வில்லவன்' என்று திருத்தம்பெறவேண்டும். [வல்லவன் - சளுக்கியன். வில்லவன் - சேரன்.]

திருமங்கைமன்னன் அருளிய பரமேச்சுரவிண்ணகரப் பதிக முழுவதும் இரண்டாம்நந்திவர்மன் என்ற பல்லவமல்லனது வரலாறுகளைக் கூறுவதென்பதும், பெருவீரனும் பரமவைஷ்ணவனுமான இவ்வேந்தர்பெருமானது நீண்ட ஆட்சிக்காலத்தில், இவ்வாழ்வாரும் விளங்கியவர் என்பதும் முன்பே தெளிவிக்கப்பட்டுள்ளன.* இப்போது வழங்கும் மேற்கண்ட பாடமுறையில், இப்பல்லவமன்னனுக்குப் பணிந்தடங்கிய வேற்றரசர்களிலே, பல்லவமன்னனும் ஒருவன் என்று கொள்ள நேர்கின்றது. பல்லவமன்னரிருவரிருந்து ஒருவரையொருவர் இவ்வாறு வணங்கியவராக ஆழ்வார் ஒருகாலும் பாடியிரார் என்றே சொல்லலாம். பல்லவரின் பழம்பகைவருள்ளே தலைசிறந்தவர், சளுக்கியவேந்தர் என்பது சரித்திரப்பிரசித்தம். இவர்களை வல்லபர், வல்லவர் என்று நூல்களும் சாஸனங்களும் வழங்குவன. இவற்றுள் 'வல்லவன்' என்பதே பல்லவன் என்று இங்கு மாறியதெனச் சொல்லலாம்.

"யஸ்ய வல்லப களப்ர கேரளா: பாண்ட்ய சோள துளு கோங்கணாதய:|
த்வாரதேச ஸமயாபிகாங்க்ஷிணஸ் ஸேவிதும் நிரவகாச மாஸதே"

என்பது, மேற்கூறிய பல்லவமல்லனது 61-ஆம் ஆண்டில் அமைந்த சாஸனசுலோகம். "எவனுடைய அசாரவாசலிலே வல்லபர், களப்பிரர், கேரளர், பாண்டியர், சோழர், துளுவர், கொங்கணர் முதலிய

* ஆழ்வார்கள்காலநிலை, திருமங்கைமன்னன்வரலாறு காண்க.

மன்னர்கள் சமபத்தைவிரும்பியவர்களாய், அது கிடைக்காமற் காத்திருக்கின்றனரோ" (அந்தணர்திவர்மபல்லவன்) என்பது இதன் பொருள்.* தம் காலத்தில் அமைந்த இச்சாஸனம், வல்லபரைத் தலைமையாகவைத்துக் கூறியவாறே,

"வல்லவன் வில்லவ னென்றுலகிற்
பலராய்ப் பலவேந்தர் வணங்குகழற், பல்லவன்"

என்று ஆழ்வாரும் பாடினர் என்பதே பொருத்தமாகும். இவ்வடியின் நான்காஞ்சீரிலே பலராய் என்பதிலுள்ள பகரத்தை மோனையெழுத்தாகக்கருதி அதற்கேற்பப் பல்லவன் என்று முதற்சீரைப் பின்னோர் மாற்றிக்கொண்டனர்போலும். இனி,

'உலகிற் பலராய்ப் பலவேந்தர்'

என்பதனுள், 'பலராய்' என்ற பின்னரும் 'பல' என ஆழ்வார்திருவாக்கில் திரும்பப்பயிலக்கூடியதன்று. 'பலபெயர்களாலேசொல்லக்கூடிய பல அரசர்கள்' என்று, உள்ளபாடத்துக்குப் பொருள்சொல்லக்கூடும். 'வல்லவன் வில்லவன் என்று பலராய்' என்பதே அப்பொருள் தரக்கூடுமாதலால், புனருத்தியாக இவ்வாறு பாடப்பட்டிராது என்றேசொல்லலாம். ஆகவே 'வலவேந்தர்' என்றிருந்தது 'பலவேந்தர்' என மாறியதோ என்று தோன்றுகிறது.† பழமையான தமிழ் கிரந்த எழுத்துக்களிலே, வகர பகரங்கட்குள் அதிக வேற்றுமையில்லை. இதுபோலும் மாற்றங்கட்கு அவ்வெழுத்துக்களின் ஒற்றுமையும் ஒரு காரணமாகும். 'வல்லவன்' என்ற பாடத்துக்கு, மேற்குறித்தபடி, ஐந்து ஆறுஞ்சீர்களில் மோனைபயிலுதல் நோக்கிக்கொள்க.

19. ௸ திருமொழி 3-4-4-ஆம் பாசுரத்தில்—

"பஞ்சியமெல் லடிப்பின்னை திறத்துமுன்னாள்
பாய்விடைக ளேழடர்த்து"

என்றுள்ள தொடரிலே, 'பஞ்சியமெல்லடி' என்பது 'பஞ்சிமெல்லடி' என்று திருத்தம்பெறத்தக்கது.

---

* பட்டத்தான்மங்கல தாம்பிரசாஸனம்,

† இவ்வாறன்றி, பலவேந்தர் - வலிபொருந்திய மன்னர் என்று பொருள் கொள்ளுதலும் அமையும்.

"பஞ்சி மெல்லடிப் பரல்வடுப் பொறிப்ப" (பெருங்கதை 2-9-162)
"பஞ்சிமெல்லடியனார் தம் பாடகந்திருத்தி" (சீவக. 2818)
"பஞ்சிமெல்லடிப்பாவை" (கம்பரா. கங்கை. 20)
ஷை ஷை ,, (பெரியபு. தடுத்தாட். 160)

என்ற முன்னோர்தொடர்களை நோக்குக. பஞ்சுதல் என்று ஒரு வினையின்மையாலும், பண்பீறன்றிப் பெயரீறுகள் இவ்வாறு திரிதலருமையாலும், வ்யாக்யானத்துக்கும் இப்பாடம் விரோதமாகாமையாலும் திருத்தப் பாடமே பொருத்தமாதல் அறியலாம். 'பஞ்சி மெல்—லடிப்பின்னை—திறத்து—முன்னாள்' என்று விருத்தச்சீரோசை பிரிவனவாம். பஞ்சி எனினும் பஞ்சு எனினும் ஒக்கும். இனி, 'பஞ்சியன்மெல்லடி' என்பது பழம்பாடமாயினும் ஆகலாம். இப்பாசுரத்தின் ஈற்றடியின் முதற்சீரிலும் 'செஞ்சுடரவெயில்' என்று, ஓசை நயம்பெறத் திருத்தங்கொள்க.

20. ஷை திருமொழி 6—6—4 ஆம் பாசுரத்தில்—

"வெங்கண்மா களிறுந்தி விண்ணி ஏற்ற
விறன்மன்னர் திறலழிய வெம்மா வுய்த்த
செங்கணான் கோச்சோழன் சேர்ந்த கோயில்
திருநறையூர் மணிமாடஞ் சேர்மின்களே"

என்று வீரவேந்தனான சோழன்செங்கணானது வெற்றிச்செயலைச் சிறப்பிக்கின்றார் திருமங்கைமன்னன். இவ்வேந்தனது வீரப்பெருமைகள் அகநானூறு புறநானூறுகளிலும் களவழிநாற்பதிலும் கூறப்பட்டுள்ளன. இவனைப்பற்றிய அவ்வடிகளில், 'விண்ணி' என்றசொல் வெண்ணி என்று திருத்தம்பெறற்குரியது. வெண்ணி என்பது தஞ்சாவூர்க்குக் கிழக்கே 15 மயிலில் ரயில்வேஸ்டேஷனாகவும், தேவாரப்பாடல்பெற்றதாகவும் உள்ள திருவெண்ணி, கோயில்வெண்ணி என்று வழங்கப்படும் தலமாகும்.

"வெண்ணித் தொன்னகர் மேயவெண் டிங்களார்"

என்பது அப்பர்வாக்கு. "வெண்ணிக்கூற்றத்து வெண்ணியே" என்ற தேவாரத்தொடரால் இது முன்பு ஒரு கூற்றத்தின் தலைநகராயிருந்தமை தெரியலாம். சங்ககாலத்தில், சேரசோழர்க்குள் பெரும்போர் நிகழ்ந்த களங்களுள் இவ்வெண்ணியும் ஒன்று (அகம். 55, 246; புறம். 66). வெண்ணிக்குயத்தியார் என்று, சங்கநலிற்

பேர்பெற்றிருந்த பெண்பாற்புலவரும் இவ்வூரினரேயாவர். செங்கணான் போர்நிகழ்த்திய களம் இவ்வூரேயாதலின், இதனை 'வெண்ணி' என்றே படித்துக்கொள்க.

21. ஷை, திருமொழி 6-ஆம் பாசுரத்தில்—

"மின்னாடு வேலேந்து விளைந்த வேளை
விண்ணேறத் தனிவேலுய்த் துலக மாண்ட...சோழன்,,

என்ற அடிகளிலே, மேற்கூறிய சோழனது வேறொரு வெற்றிச்செயலும் கூறப்பட்டுள்ளது. இதனில், 'விளைந்தவேளை' என்பதை 'விளந்தைவேளை' எனத் திருத்திக்கொள்க. இத்திருத்தம்பற்றி, 16-வருஷங்கட்குமுன்பே ஆழ்வார்கள்காலநிலையுள் குறிப்பிட்டுள்ளேன். விளந்தை என்பது, திருச்சிராப்பள்ளி ஜில்லா உடையார்பாளயம்ஜமீனைச் சார்ந்து, கோட்டை முதலிய பழஞ்சின்னங்களுடன் இன்றும் உள்ள வூராகும். இவ்வூரைத் தலைமையாகக் கொண்டு இதனைச்சூழ்ந்துள்ளபகுதி விளந்தைக்கூற்றம், விளந்தைப் பற்று என வழங்கிவந்தது. சோழன் செங்கணானுக்கும் சேரமான் கணைக்காலிரும்பொறைக்கும் பெரும்போர்மூண்ட களமான கழுமலம் என்ற அரண்பெற்ற வூர் இவ்விளந்தைக்கூற்றத்தைச் சார்ந்ததே. அப்போரில், சேரன்படைமுதலியான கணையன் என்பவனை வென்று அக்கழுமலத்தைச் செங்கணான் கைப்பற்றினான் என்று அகநானூறுமுதலிய சங்கநூல்கள் கூறுகின்றன. இவற்றினின்று விளந்தைக்கூற்றத்தில் நடந்த போரையே அந்நூல்கள் கூறுவன என்றும், அவ்விளந்தைத்தலைவனான வேளே சேரன்படைமுதலியான கணையன் என்றும் கருத இடந்தருகின்றது. இவ்வாறாயின் விளந்தைவேளான சேரன்படைத்தலைவனைப் போரில் வென்று சோழன் உலகமாண்டசெய்தியைச் சங்கநூல்கள்போலவே, திருமங்கைமன்னனும் கூறினாராயிற்று. ஆராய்ச்சித்தொகுதியிலும் இதனை நன்கு விளக்கியுள்ளேன் (பக். 245—8).

22. பெரியதிருமொழி 7-7-2-ஆம் பாசுரத்தின் முதலிலே—

"பரனே! பஞ்சவன் பௌழியன் சோழன்
பார்மன்னர் மன்னர் தாம்பணிந் தேத்தும்-வரனே!"

என்ற தொடருள், 'பௌழியன்' என்று ஓதும் பாடம் 'பூழியன்' என்று திருத்தற்குரியது. பூழியன்-பூழிநாட்டுக்குரியவன். பூழி-சேரமண்டலத்தின்பகுதியான கொடுந்தமிழ்நாடுகளில் ஒன்று;

"குடம் கற்கா வேண் பூழி" என்ப. இந்நாட்டுரிமைபற்றிச் சேரனைப் பூழியன் என்ற பெயரால் பழைய நூல்களும் நிகண்டுகளும் வழங்குவன. இப் பூழிநாடு பாண்டியர்வசமான பிற்காலத்தில் அப் பாண்டியனைப் பூழியன் என்ற பெயரால் வழங்கியது முண்டு. ஆனால் பழையவழக்கு அவற்கு இல்லை. பௌழியன் என்ற தத்திதம்போன்ற பெயர்வழக்கு, சேரர்க்கு யாண்டும் காணப் படாமையால் இதுவும் திருத்தம்பெறத்தக்கதே.

23. ஷை திருமொழி 10-2-4-ஆம் பாசுரத்தில்—

"மாமயிலன்ன அஞ்சலோதியைக் கொண்டுநடமின்"

என்ற தொடரில், 'அஞ்சலோதி' என்பது வ்யாக்யானபாடம். இதற்கு—"அஞ்சு-(இருட்சி, சுருட்சி, நீட்சி, குளிர்ச்சி, அழகு என) அஞ்சுவகைப்பட்டிருக்கை. அல் என்று ராத்ரி; அத்தால் இருட்சியை நினைக்கிறது. ஓதி என்று மயிர்முடி" என்பது அவ் வியாக்யானபங்தி. இப்பாடத்தின் பழம்பொருளை நாம் கௌரவிப்போமாக. ஆயினும் 'அஞ்சிலோதி' என்பது, பழைய தமிழ் வழக்கானபாடம் என்பதை நாம் மறக்கமுடியாது. சங்கச்செய்யுட்களிலும் பின்னூல்களிலும் அழகியபெண்பாலைக் குறிக்குமிடத்து இத்தகைய தொடரே வழங்குவதாகும்.

ஐங்குறுநூறு (49, 299, 391, 448) குறுந்தொகை (280)
சிலப்பதிகாரம் (25, 75) சீவகசிந்தாமணி (134,691)

என்பன முதலிய இடங்களிற் கண்டுகொள்க. அம் சில் ஓதி-அழகிய, சிலவாகிய, கூந்தலையுடைய பெண். 'சின்மெல்லோதி' என்றும் வழங்குப (பெருங்கதை. 1-41-76). பெண்ணின் இளமைபற்றிக் கூந்தற்குச் சின்மை கூறப்பட்டதென்க. சின்மை-சிலவாந்தன்மை; குறுமையுமாம் (பதிற். 76. உரை).

24. ஷை திருமொழி 11-8-3, 4-ஆம் பாசுரங்களிலும், மற்ற ஆழ்வார் அருளிச்செயல்களிலும்—

"தூங்கார் பிறவிக்கள் இன்னம் புகப்பெய்து"
"உருவார் பிறவிக்கள் இன்னம் புகப்பெய்து"
"உன்னடிக்கள் எந்நாள்வந்து கூடுவனே"
"கூட்டரிய திருவடிக்கள் எஞ்ஞான்று கூட்டுதியே"
(திருவாய். 6-10-6; 4-10-6)
"மெல்லடிக்கள் குருதிசோர" (பெருமாள். 6-4)

என்பன முதலிய பலவிடங்களில் 'பிறவிக்கள்' 'திருவடிக்கள்' என்றிவ்வாறுள்ளவை 'பிறவிக்கண், திருவடிக்கண்' என்று திருத்தமாக ஓதற்பாலன. 'தேகாத்மாபிமான மானஜன்மங்களிலே....பிரவேசிப்பித்து" என்பது முதல்மேற்கோளின் வ்யாக்யானம். அதனால் இவ்விடங்களிலெல்லாம் 'கண்' என்ற ஏழாம்வேற்றுமையுருபே முன்னோர்வழங்கிய பாடம் என்பது தெரியலாம்.

25. ஷை திருமொழி 8-10-2, 7-ஆம் பாசுரங்களிலும், 5-2-ம் திருமொழி முழுதிலும்—

"நமன்றமர் பற்றாது காத்திபோல் கண்ணபுரத் துறையம்மானே"
"உன்றமர்க்கென்றும் நமன்றமர் கள்ளர்போல்"

எனவருந் தொடர்களிலே, 'போல்' என்பவை 'காத்திபோன்ம்' 'கள்ளர்போன்ம்' என்றே ஓதற்பாலன. போன்ம்-போலும் என்பதன் திரிபு. இதனை ஒப்பில்போலியில்வரும் உரையசை என்பர். முற்றுவினையிலும் 'திசையறி மீகானும் போன்ம்' (பரிபா.) என்று இவ்வாறு திரிந்துவழங்கும். ளகர லகரங்கள் திரிந்து, மருண்ம் (=மருளும்), போன்ம்(=போலும்) என ணகர னகரங்களின் முன் வரும் மகரம் மாத்திரைகுறுகலின் மகரக்குறுக்கம் என்பர் இலக்கணநூலோர். இம்முறையே திருமாலையில்—

"நின்னோடு மொக்க வழிபட அருளினாய்போன் மதிற்றிருவரங்கத்தானே"

என்ற தொடருள், 'போன்மதில்' என்று புணர்ந்துள்ளதைப் 'போன்ம் மதில்' என்று பிரித்து ஓதுக. இவ்வாறு பிரித்தோதாக் குறையிலிருந்தே 'போல்' என்பதே நேருருவம் என்றுகொண்டு, பலவிடங்களிலும் அதுவே வழங்கலாயிற்று.

'சோம்பரை உகத்திபோலும்'
'அவர்கடாம் புலையர்போலும்'

என வினையிடங்களில், இச்சொல்லின் திரியில்நிலை தொண்டரடிப் பொடியாழ்வார்வாக்கால் விளங்கியவாறே,

'வழிபட அருளினாய்போன்ம்'

என அதன் திரிந்தநிலையும் அவர் திருவாக்கிற் பயின்றுள்ளமை உணரத்தக்கது.

[தொடரும்]

உ

குணத்தால் விளையும் நகைச்சுவை*

சென்னைப்பல்கலைக்கழகத்துத் தமிழாராய்ச்சித்துறைத்தலைவர்

ஸ்ரீ. எஸ். வையாபுரிப்பிள்ளையவர்கள் B.A., B.L.

குணத்தால்விளையும் நகை என்ற தலைப்பு நம்மிற் பலரையும் ஆலோசனையில் அழுத்திவிடக்கூடியதே. கண்ணிற்கும் காதிற்கும் புலப்படுவனவற்றை ஆதாரமாகக்கொண்டே நகைமுதலிய சுவை தோன்றும் என்று பொதுவாக நினைக்கலாம். இது உண்மையே. ஆனால் கண் செவி என்ற இரண்டிற்கும் அடிப்படையாகவிருக்கிற மனத்தின் நிலையும் நகைச்சுவைக்கு இன்றியமையாதது. 'கண்ணினுஞ் செவியினுந் திண்ணிதி னுணரும், உணர்வுடைமாந்தர்க் கல்லது' நகைமுதலிய சுவையின் நயம் தெரியமுடியாது என்று தொல்காப்பியரும் மனநிலையின் அவசியத்தை வற்புறுத்தியிருக்கிறார். மிகவும் எளிதான சில விஷயங்களால் இவர் சொல்வதன் உண்மை விளங்கும்.

முதலாவதாக, எல்லாராலும் நன்றாகச் சிரிக்கமுடியாது. இதை உங்கள் அனுபவங்கொண்டே நீங்கள் தெரியக்கூடும். சிலர் கண்களுக்குமுன் எவ்வளவு வேடிக்கைகாட்டினாலும் அவர்களால் சிரிக்க முடிவதில்லை. அவர்களுடைய மன அமைப்பில் ஏதோ ஒரு குறைபாடு இருப்பதால் சிரிப்பதற்கு அவர்கள்மனம் இடங்கொடுப்பதில்லை. இதனால் சிரிப்பதற்கு ஏற்ற மனநிலையொன்று உண்டென்பது விளங்கவில்லையா?

இரண்டாவதாக, தக்க மனநிலையில் மனத்தினாலும் சிரிப்பதுண்டென்று வள்ளுவர் முதலிய ஆசிரியர்கள் குறித்திருக்கிறார்கள். 'பூதங்கள் ஐந்தும் அகத்தே நகும்' என்றும், 'மகிழ்ந்துள்ளம்

* சென்னை அகில இந்திய ரேடியோநிலையத்தினின்று 2—3—43-ல் ஒலிபரப்பியது; நிலயத்தாரின் அநுமதிபெற்று வெளியிடப்பெறுகிறது.

உள்ளான் உவப்ப நடைத்து' என்றும் அவர் கூறுகிறார். சூர்ப்பணகை இராமனை நெருங்கித் தனது காதலை வெளிப்படக்கூறி, அரசர்கள் மணந்துகொள்வதற்குரிய வம்சத்தில் தான் வந்தவள் என்று தெரிவிக்கிற இடத்தே இராமன் தன்மனத்துள்ளே சிரித்துக்கொண்டானென்று சொல்லப்படுகிறது. கம்பர்,

'அருத்தியன் அனைய கூற அகத்துறு நகையின் வெள்ளைக்
குருத்தெழு இன்ற நிலக் கொண்டலுண் டாட்டங் கொண்டான்'

என்று பாடுகிறார்.

நகைப்புநிகழ்வதற்குத்தக்க மனநிலையொன்று வேண்டுமென்றேன். இந்நகைப்பு பொருள் நிரம்பிப் பூர்த்தியாகவேண்டுமானால் மனத்திலிருந்தெழுந்தே வெளிப்புறப்படவேண்டும் என்பது வள்ளுவர்வாக்கால் அறியலாம். மனநிலை தக்கதாயமைந்து நகைப்பு உள்ளிருந்தெழுமாயின் வெளித்தோன்றுவது புன்னகையாயிருப்பினும் பொருள்நிரம்பியிருக்கும் என்பது கம்பர்வாக்கினால் அறியலாம். இம் மனநிலையில்லாமற்போனால் மனத்திற்கும் நகைப்புச்செயலுக்கும் யாதொரு தொடர்புமில்லாமல் பார்ப்பவர்களுக்கு நகைப்பு உண்டாகும். இதற்குக் கள்ளுண்டவனுடைய நகைப்பை உதாரணமாகக் கூறலாம். மனநிலை தக்கதாயில்லாது துன்பத்தால் நிரம்பியிருக்குமாயின், அப்போது நிகழும் புன்னகை பார்ப்பவர்மனத்தைச் சோகத்தில் ஆழ்த்திவிடும். தன் கணவன் தன்னைப்பிரிந்து வெளிநாட்டுக்குச் செல்லப்போகின்றான் என்பதைக் குறிப்பினால் உணர்ந்த ஒருமங்கை அவனிடம் அணுகும்போது,

'நலமிகு சேவடி நிலம்வடுக் கொளாஅக்
குறுக வந்துதன் கூரெயிறு தோன்ற
வறிதகத் தெழுந்த வாயல் முறுவலள்'

என்று வருணிக்கப்படுகிறாள். இங்ஙனமே கோவலன் தன்னுடன் வழிவந்த கண்ணகியைநோக்கி 'உன் விஷயத்தில், பலதவறுகள் செய்துவிட்டேன். நான் 'வா' என்றழைத்தவுடன் எப்படி நீ மனமொப்பிவந்தாய்?' என்று கேட்க, அவள் 'நீர் என்னுடன் இல்லாமையாகிய வருத்தத்தை மறைத்தொழுகினேனாக, உமது பெற்றோர்கள் என்குணத்தைக்கண்டு என்னை அன்போடு பாராட்டினார்கள்.

அப்போது என்முகத்திலே சிறிது புன்னகை அரும்பிற்று. இப்புன்னகை துன்பக்காரணமாகத் தோன்றியது என்று அதன் போலித் தன்மையை அவர்கள் உணர்ந்து மிகவும் வருந்தினார்கள். அவர்கள் வருந்தும்படி செய்துவிட்டேனேயென்பதுதான் எனது வருத்தம்' என்று கூறுகிறாள்.

'பெருமகள் தன்னொடு......மாநிதிக்கிழவன்
... ...
அற்புளஞ் சிறந்தாங் கருண்மொழி யளைஇ
எற்பாராட்ட யான் அகத் தொளித்த
நோயுந் துன்பமும் நொடிவது போலுமென்
வாயல் முறுவற் கவருளம் வருந்தப்
போற்றா வொழுக்கம் புரிந்தீர்'

என்பது இளங்கோவடிகள்வாக்கு. இங்கே மனநிலையோடு பொருந்தாத புன்னகை வாயல் (அதாவது உண்மையற்ற போலியான) புன்னகையென்று சொல்லப்படுகிறது. இவ்வாறாக நகைப்பு அல்லது புன்னகையின் தன்மையே மனநிலையால் மாறிவிடுகிறது.

மேற்கூறியவற்றால் நகைப்பு வெளிப்பட நிகழ்வதற்கும், நகைப்பு தன்னகத்தே உண்டாவதற்கும், வெளிப்படநிகழும் நகைப்பை அதிகரித்தற்கும் குறைத்தற்கும், நகைப்பின் தன்மையையே மாற்றிவிடுவதற்கும் மனநிலையே காரணமாகும் என்பது விளங்கும்.

வேறொன்று: நகைச்சுவையைப்பற்றிப் பலமொழிகளிலும் எழுதப்பட்டிருக்கும் புத்தகங்களை ஓரிடத்தில் தொகுத்துவைப்பதானால் குறைந்தது ஒரு வண்டிப்பாரமாவது இருக்கும். தமிழ், வடமொழி, கிரீக்கு, லத்தீன், ஆங்கிலம், பிரஞ்சு, ஜெர்மன், இத்தாலி முதலிய மொழிகளிலெல்லாம் இச்சுவையைப்பற்றிப் புத்தகங்கள் உள்ளன. பண்டைக்காலத்து ஆசிரியர்களும் இடைக்காலத்து ஆசிரியர்களும் தற்காலத்து ஆசிரியர்களும் எழுதியிருக்கிறார்கள்; ஆண்பெண் இருபாலாரும் எழுதுவதில் போட்டியிட்டிருக்கிறார்கள்.

